12TH STD

# இரண்டு மதிப்பெண் வினாத் தேர்வு - 2023

## கணக்குப்பதிவியல்

நேரம் : 90 நிமிடம் மதிப்பெண் : 50

எவையேனும் 25 வினாக்களுக்கு விடையளிக்கவும். 25 × 2 = 50

1. நிலைஅறிக்கை என்றால் என்ன?
2. பின்வரும் தகவல்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்

| விவரம் | தொகை (₹) |
|---|---|
| 2018, ஜனவரி1 இல் முதல் | 2,20,000 |
| 2018, டிசம்பர் 31 இல் முதல் | 1,80,000 |
| அவ்வாண்டில் கொண்டுவந்த கூடுதல் முதல் | 40,000 |
| அவ்வாண்டின் எடுப்புகள் | 50,000 |

3. பின்வரும் தகவல்களிலிருந்து கடன் விற்பனையை காணவும் :

| விவரம் | தொகை (₹) |
|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று பற்பல கடனாளிகள் | 1,00,000 |
| கடனாளிகளிடமிருந்து பெறப்பட்ட ரொக்கம் | 2,30,000 |
| அளித்த தள்ளுபடி | 5,000 |
| உள் திருப்பம் | 25,000 |
| 2019, மார்ச் 31 அன்று கடனாளிகள் | 1,20,000 |

4. உயில்கொடை என்றால் என்ன?
5. இலாப நோக்கற்ற அமைப்பின் முதலின வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்
6. பின்வரும் விவரங்கள் வேதாரண்யம் விளையாட்டு மன்றத்தின் வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| மட்டைகள் மற்றும் பந்துகள் தொடக்க இருப்பு | 3,000 |
| அவ்வாண்டில் வாங்கிய மட்டைகள் மற்றும் பந்துகள் | 17,000 |
| பழைய மட்டைகள் மற்றும் பந்துகள் விற்பனை | 2,000 |
| மட்டைகள் மற்றும் பந்துகள் இறுதி இருப்பு | 4,000 |

7. 2018 ஆம் ஆண்டில் மேத்யூ என்ற கூட்டாளி எடுத்த எடுப்புகள் ₹. 20,000. எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 10% என விதிக்கப்பட்டது. 2018, டிசம்பர் 31 அன்றைய எடுப்புகள்மீது வட்டி கணக்கிடவும்.
8. நற்பெயர் என்றால் என்ன?
9. உயர் இலாபம் என்றால் என்ன?

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

10. பின்வரும் விவரங்களிலிருந்து சராசரி இலாபம் கணக்கிடவும்.

    2016: ₹. 15,000 ; 2017: ₹. 20,000; 2018: ₹. 10,000
11. தியாக விகிதம் என்றால் என்ன?
12. பின்வருவனவற்றுள் மறுமதிப்பீட்டு கணக்கில் பற்று அல்லது வரவு வைக்கப்படுவதைத் தரவும்.
    (அ) சொத்தின் மீதான தேய்மானம்
    (ஆ) பதிவுறா பொறுப்புகள்
    (இ) கொடுபடவேண்டிய செலவிற்கான ஒதுக்கீடு
    (ஈ) சொத்தின் மீதான மதிப்பேற்றம்
13. அருள் மற்றும் அனிதா என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை 4:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 31.3.2018 அன்று புதிய கூட்டாளியாக அஜய் என்பவர் சேர்த்து கொள்ளப்பட்டார். சேர்க்கையின் போது, நிறுவன ஏடுகளில் பொதுக்காப்பு ₹. 42,000 எனக் காட்டியது. பொதுக்காப்பினை பகிர்ந்தளிப்பதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்
14. கூட்டாளி விலகல் என்றால் என்ன?
15. கலா, மாலா மற்றும் நீலா என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபங்களை 2:2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். கயல் என்பவர் கூட்டாண்மையை விட்டு விலகுகிறார். மாலா மற்றும் நீலாவுக்கும் இடையே உள்ள புதிய இலாபப் பகிர்வு விகிதம் 3:2. ஆதாய விகிதத்தைக் கணக்கிடவும்.
16. ஆனந்த் மற்றும் சுமன் என்ற கூட்டாளிகள், இலாப நட்டங்களை 3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். அவர்கள் சரண் என்பவரை 1/5 பங்கிற்கு கூட்டாளியாகச் சேர்த்தனர். அவர் அப்பங்கு முழுவதையும் ஆனந்த்திடமிருந்து பெற்றுக் கொண்டார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதத்தைக் கணக்கிடவும்
17. பங்குகள் ஏன் ஒறுப்பிழப்பு செய்யப்படுகின்றன?
18. மிகை ஒப்பம் என்றால் என்ன?
19. பாரடைஸ் வரையறு நிறுமம் ₹. 4,40,000 மதிப்புள்ள சொத்துகளை சுகுணா அறைகலன் வரையறு நிறுவனத்திடமிருந்து வாங்கியது. இதற்குப் பதிலாக ₹. 10 மதிப்புள்ள முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளை செலுத்தி நிறைவு செய்தனர். பதிவுகளைத் தரவும்.
20. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளை பட்டியலிடவும்
21. அருள் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயாரிக்கவும்.

| விவரம் | 2015 - 2016 (₹) | 2016 - 2017 (₹) |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 50,000 | 60,000 |
| இதர வருமானம் | 10,000 | 30,000 |
| செலவுகள் | 40,000 | 50,000 |

22. புற அக பொறுப்பு விகிதம் என்றால் என்ன?

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

23. கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து விரைவு விகிதத்தைக் கணக்கிடவும்.
மொத்த நடப்புப் பொறுப்புகள் ₹. 2,40,000; மொத்த நடப்புச் சொத்துகள் ₹. 4,50,000 ;
சரக்கிருப்பு: ₹. 70,000 ; முன்கூட்டிச் செலுத்திய செலவுகள்: ₹. 20,000.

24. கணக்கியல் அறிக்கைகள் என்றால் என்ன?

25. ஏதேனும் ஐந்து கணக்கியல் அறிக்கைகள் கூறு

26. எதிர்பதிவு என்றால் என்ன?

27. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு என்றால் என்ன?

28. நிலைமுதல் முறை என்றால் என்ன?

29. 2019, மார்ச் 31 அன்று தாமஸ் என்பவரின் ஏடுகளிலிருந்து பெறப்பட்ட இருப்புகள் பின்வருமாறு:

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 6,00,000 | செலுத்தற்குரிய மாற்றுசீட்டு | 1,20,000 |
| அறைகலன் | 80,000 | கைரொக்கம் | 20,000 |
| நிலம் மற்றும் கட்டடம் | 3,00,000 | பெறுதற்குரிய மாற்றுசிட்டு | 60,000 |
| பற்பல கடனாளிகள் | 3,20,000 | சரக்கிருப்பு | 2,20,000 |

2019, மார்ச் 31 ஆம் நாளைய நிலைஅறிக்கை தயாரிக்கவும் மற்றும் அந்நாளைய முதல் கண்டறியவும்.

30. சாரா நிறுமம் ₹. 10 மதிப்புள்ள 10,000 நேர்மைப் பங்குகளை ₹.2 முனைமத்தில், முழுவதும் விண்ணப்பத்துடன் செலுத்துமாறு வெளியிட்டது. குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

www.Padasalai.Net